# NATIONAL COLLEGE

(AUTONOMOUS)
COLLEGE WITH POTENTIAL FOR EXCELLENCE
NATIONALLY RE-ACCREDITED WITH 'A+' GRADE BY NAAC
A UNIT OF DR. V. KRISHNAMURTHY EDUCATIONAL FOUNDATION
TIRUCHIRAPPALLI-620 001.

ESTD. 1919

## *Department of Library and Information Science*
## *CENTRAL LIBRARY*

*Cordially invites you for the Inauguration of*

## Library Orientation Programme for I Year - 2018

*On 02nd August 2018 (Thursday) at 11.30 A.M.*

*Venue: Library Audio Visual Theatre*

**Dr. P. Raghavan**
*Librarian (Retd.), National College*
*Welcome Address*

**Dr. R. Sundararaman**
*Principal, National College*
*Presidential Address*

**Shri. K. Raghunathan**
*Secretary, National College*
*Distribution of Barcode ID Cards*

**Dr. T. Sureshkumar**
*Librarian, National College*
*Introductory Remarks*

| | | |
|---|---|---|
| Shri. K. Raghunathan | Dr. R. Sundararaman | Dr. T. Sureshkumar |
| *Secretary* | *Principal* | *Organizing Secretary* |

AS PART OF CENTENARY YEAR CELEBRATIONS

100 Years of EDUCATIONAL EXCELLENCE

www.nct.ac.in

தினமணி திருச்சி 5

வெள்ளிக்கிழமை
3 ஆகஸ்ட் 2018

# 1.50 லட்சம் புத்தகங்கள் கணினியில் பதிவேற்றம்

**திருச்சி, ஆக.2:** திருச்சி தேசியக் கல்லூரி நூலகத்தில் 1.50 லட்சம் புத்தகங்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு மாணவர்கள் இருந்த இடத்திலேயே பயிலும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருச்சி தேசியக் கல்லூரியில் இளங்கலை, முதுகலை முதலாமாண்டு பயிலும் மாணவர்களுக்கு நூலக விதிமுறைகள் மற்றும் நூலக பயன்பாடு குறித்த பயிற்சி வகுப்பு வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த விழாவுக்கு தலைமை வகித்து கல்லூரி முதல்வர் ஆர். சுந்தரராமன் பேசியது: தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக அனைத்தும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு வருகிறது. இதன்படி, நூலகங்களும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு வருகின்றன. கணினி மூலம் நூலகத்தை பயன்படுத்தும் முறை வழக்கத்துக்கு வந்துள்ளது. இதன் மூலம், மாணவர்கள் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் கணினி உதவியுடன் பாடப் புத்தகங்களை பயில முடியும். இதற்கான வசதிகள் தேசியக் கல்லூரியின் நூலகத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை மாணவர்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.




திருச்சி தேசியக் கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு பார்கோடுடன் கூடிய அடையாள அட்டையை வழங்குகிறார் கல்லூரிச் செயலர் கே. ரகுநாதன். உடன் (இடமிருந்து) ஓய்வு பெற்ற நூலகர் முனைவர் பி. ராகவன், கல்லூரி முதல்வர் ஆர். சுந்தரராமன், கல்லூரி நூலகர் டி. சுரேஷ்குமார்.

கல்லூரிச் செயலர் கே. ரகுநாதன், மாணவர்களுக்கு கணினி மூலம் நூல்கள் வழங்கும் வகையிலான பார்கோர்டு வசதியுடன் கூடிய நூலக அடையாள அட்டைகளை வழங்கி வாழ்த்திப் பேசினார்.

கல்லூரி நூலகர் டி. சுரேஷ்குமார் கூறியது: இளங்கலை, முதுகலை பயிலும் அனைத்து துறை மாணவர்களுக்கான 1.50 லட்சம் எண்ணிக்கையிலான புத்தகங்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. நூலகத்தில் உள்ள கணினிகளை பயன்படுத்தி நூலகத்திலேயே புத்தகங்களை படிக்கலாம். இல்லையெனில், மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பார்கோர்டு வசதியுடன் கூடிய அடையாள அட்டைகளை பயன்படுத்தி இருந்த இடத்திலேயே ஆன்-லைன் மூலமாக புத்தகங்களை பதிவிறக்கம் செய்து படிக்க முடியும். கணினிமயமாக்கப்பட்ட நூலகத்துக்கு தனியே கட்டடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில், ஓய்வு பெற்ற நூலகர் பி. ராகவன், நூலக உதவியாளர்கள் செல்வமண், தனலட்சுமி, லட்சுமி, விஜயா, லட்சுமணன் மற்றும் பேராசிரியர்கள், மாணவர், மாணவிகள் என பலர் கலந்து கொண்டனர்.